# அரசறிவியல்

## பெண்ணியல்வாத அணுகுமுறை



தேர்ச்சி மட்டம் :- 1.4 அரசியலைக் கற்பதற்கான அணுகுமுறைகள்

# 1.4.7 பெண்ணியல்வாத அணுகுமுறை



ஒரு விடயத்தை இலகுவாகவும் தெளிவாகவும் விளக்குவதற்கு பயன்படுவது அணுகுமுறை ஆகும். அந்த வகையில் அரசறிவியலில் உள்ள விடயங்களை இலகுவாகவும் தெளிவாகவும் விளங்குவதற்கு அரசறிவியலுக்கான அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் அண்மையில் அறிமுகமான புதிய அணுகுமுறையாக பெண்ணியல்வாத அணுகுமுறை விளங்குகின்றது. அரசியல் மற்றும் சமூக ஆய்வுகளில் பாரியதாக்கத்தை ஏற்படுத்திய பெண்ணியல்வாதம் கற்கைநெறி 1970 களில் மாற்றமடைந்தது.

பெண்கள் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தினை முன்னிலைப்படுத்தி பெண்கள் அரசியலில் பங்குபற்றுதலை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு முன்வைக்கப்பட்ட அணுகுமுறையே **பெண்ணியல்வாத அணுகுமுறையாகும்**.

பெண்களுடைய அரசியல் ஆற்றல்களையும் அரசியல் ஆளுமைகளையும் சமுதாயத்திற்கு பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் முன்வைத்த அணுகுமுறையே இதுவாகும்.

பெண்ணியல்வாத அணுகுமுறை அரசியல் தொடர்பில் அதிமுக்கிய வினாக்களை எழுப்பியது மட்டுமன்றி **“அரசியல்”** என்ற எண்ணக்கருவின் விளக்கத்தையும் விருத்தி செய்தது.

பெண்ணியல்வாத அணுகுமுறையை முன்வைக்கின்ற ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்ற விடயங்கள் ஆவன


1. பெண்கள் அரசியலிலே பங்குபற்றுவதனை தடுக்கின்ற காரணிகளை பகுப்பாய்வு செய்தல்.
2. பெண்களை மையப்படுத்தி அரசியல் இயக்கங்கள் உருவாக்கம் பெற்றிருக்காமை.
3. பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சமூக வன்முறைகள்.
4. பெண்கள் அரசியலிலே பங்குபற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் காணப்படாமை.
5. பெண்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வினை கட்டியெழுப்புவதற்கான முறைகள், வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்பட்டிருக்காமை.
6. பெண்கள் உடைய பொருளாதார அந்தஸ்து வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படாமை.
7. குடும்ப மட்டங்களில் பெண்களுக்கான சமசந்தர்ப்பம், சமவாய்ப்பு என்பவற்றை வலிமைப்படுத்திக் கொள்வதற்கான மனப்பாங்கு விருத்தி செய்யப்படாமை.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

9. அரசியல் யாப்புக்களில் பெண்களுக்கான உரிமை பற்றி குறிப்பிட்டிருக்கின்ற போதிலும் அவற்றை நடைமுறை ரீதியாக அனுபவிப்பதற்கான சூழ்நிலை விருத்தி செய்யப்பட்டிருக்காமை.
10. ஆண் ஆதிக்கபோக்கு தொடர்ந்து வலுப்பெற்று வருகின்றமை.

போன்ற தடைகளை அகற்றுவதற்கு அரசியல் சமுதாயத்திலே ஆரோக்கியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசியத்தை பெண்ணியல்வாதிகள் வலியுறுத்துகின்றனர்.

## பெண்ணியல் வாதத்தின் அரசியல், சமூக ஆய்வுகள் காரணமாக சேர்ந்த புதிய கோட்பாடுகள்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பெண்ணியல்வாத அணுகுமுறை
## அரசறிவியல் மற்றும் கோட்பாடுகளில் ஏற்படுத்திய மாற்றங்கள்

வர்க்கம், இனம், சமூகம், பிரசை போன்ற அரசறிவியலின் பிரதான எண்ணக்கருக்கருவைச் சேர்த்தல்

அரசியல் எண்ணக்கருக்கள் அனைத்திலும் பால்நிலை பற்றிய அணுகுமுறைகளை சேர்த்தல்

மனிதன் மற்றும் சமூகவிடுதலை பற்றிய பாரம்பரிய தத்துவத்தில் பெண்விடுதலையை இணைத்துக் கொள்ளல் ஆகும்.

அரசியல் என்ற பொதுத்துறை பரப்பில் இடம்பெறும் ஒரு செயன்முறையை தனியார்துறை பரப்பை அரசியலின் ஒரு பகுதியாக சேர்த்துக்கொள்ளல்



பெண்ணியல்வாத ஆய்வாளர்களில் முதன்மையானவராக **மக்கிஹிம்** *(Maggie Humm)*, **றிபெக்கா வோக்கர்** *(Rebecca Walker)* விளங்குகின்றனர்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வினாக்கள்

1) பெண்ணியல் வாத அணுகுமுறையை முன்வைக்கும் ஆய்வாளர் வலியுறுத்தும் விடயங்கள் இரண்டு தருக.

2) பெண்ணியல் வாதத்தில் அரசியல், சமூக ஆய்வுகளில் சேர்ந்த புதிய எண்ணக்கருக்கள் இரண்டினை குறிப்பிடுக.

3) பெண்ணியல் வாத ஆய்வாளர்களில் முதன்மையானவர் இருவர் பெயர்களை குறிப்பிடுக.

4) பெண்ணியல் வாத அணுகுமுறை பற்றி ஆராய்க.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk